**தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 திசெம்பர் 20 ஆம் திகதிய தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கயை தெரிவிக்கும் உறுதியின் (4)(ஏ) பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்த்திற்கு அறிக்கையிட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியம இலக்கம் 3 இன் 47(ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் முன்னைய ஆண்டின் தவறுகளை சீராக்கும் போது உரிமை மாற்றங்கள் கூற்றின் ஆரம்ப மீதிகளை மீண்டும் வெளியடும் போது முன்னோக்கிய ரீதியில் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | பூங்காக்கள் பொறுப்பு நிதியத்தின் 2020 ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் உரிமை / நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புகளுக்கு 2020.01.01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதிகள் மீள் வெளியிடப்படும் வகையில் 2020.01.01 ஆந் திகதியில் இருந்து | உரிமை மூலதன மாற்றல்கள் கூற்றில் முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கான சீராக்கம் தெளிவாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அமுலாகும் வகையில் நாட்குறிப்பு பதிவு மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நியம இலக்கம் 2 இரண்டின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 இல் காசுப் பாய்ச்சல் கூற்று நேரில் முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதால் தொழில்படு மூலதனத்தில் வேறுபாடுகள் இடம் பெற்ற முறை சீராக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் பெயரளவு இலாபத்தை அடிப்படையாக கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் பூங்காக்கள் நிதியத்தின் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் தொடர்பாக சரியான தெளிவொன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உள்ளவாறான பணம் கிடைத்து (கட்டுநிதி பெறுவனவு) அடிப்படையாக கொண்டு 2020 ஆம் ஆண்டின் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் நுழைவுச் சீட்டு வருமானம் ரூபா 360,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டதை திரட்டிய நிதியக் கணக்கில் சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் நுழைவுச்சீட்டு வருமானக் கணக்கிற்கு வரவு வைத்தமை காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப் பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அவ்வரவுப் பதிவு நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக் கணக்கிற்கு பதிவுசெய்யப்பட வேண்டியுள்ளதால் கணக்குகளைத் தயாரிக்கும் போது அத்தவறுகளை சீாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டிற்குரிய வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| கிடைக்க வேண்டிய டிக்கட் வருமானம் | 194,051,390 | நிலைத்திருதன்மை மற்றும் முழுமைத் தன்மையை உறுதிப்படுத்துதல் | பூங்காக்களில் நுழைவுச்சீட்டு வருமானத்தில் 25 சதவீதம் இந்நிதியத்தின் வருமானமாக கிடைக்க வேண்டிய டிக்கட் வருமானக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்படுவதுடன் அதில் ஒவ்வொரு மாதத்திலும் கிடைக்கும் வருமானமாக அம்மாதத்தின் செலவினத்திற்கு சமமான தொகை கிடைக்க வேண்டிய டிக்கட் சீட்டு வருமானத்தில் இருந்து கழித்து பொது வைப்புக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்படும் இதன் காரணமாக இக்கணக்கு மீதி அட்டுறுவாகி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இம்மீதி காணப்படுகின்றது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது 02/2018 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த நிதியத்தை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்த போதும் மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2019 மார்ச் 01 ஆந் திகதி அரச நிதி திணைக்களத்தில் இந் நிதியத்தை சட்ட ரீதியான நிதியம் ஒன்றாக தாபித்து நடாத்திச் செல்வதற்கு கலந்துரையாடப்பட்டிருந்த போதும் 2021 யூலை 09 ஆந் திகதி வரை அச்சட்டரீதியான நிதியம் தாபிக்கப்படாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 64,689,090 ஆன செலவினம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. | அரச நிதித் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்நிதியத்தினை சட்டரீதியான நிதியமொன்றாக மாற்றி எதிர்காலத்திலும் நடாத்திச்செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நிதியத்தின் செயற்பாடுகளை எதிர்காலத்திலும் நடாத்திச் செல்வது பொருத்தமானதெனவும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன புதிய தாவரவியல் | இந்த நிதியானது சட்டரீதியான நிதியமொன்றாக உருவாக்கப்படவோ வேண்டும் அல்லது சுற்றறிக்கையின் பிரகாரம் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | பூங்காக்கள் சட்டத்தின் கீழ் ‘‘தாவரவியல் பூங்காக்கள் அபிவிருத்தி நிதியம்’’ என்ற பெயரில் சட்டரீதியான நிதிய மொன்றாக ஏற்படுத்துவதற்கு தேவையான கட்டளைகள் சட்ட வரையுனர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 60,241,942 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா. 103,488,041 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 43,246,099 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இக் குறைவுக்கு நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று காரணமாக டிக்கட் வருமானம் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 125,676,371 ஆல் குறைவடைந்தமை மற்றும் செலவினம் ரூபா 82,430,271 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாவர பூங்காக்கள் நம்பிக்கை நிதியமொன்று தாபித்தல் தாவரவியல் பூங்காக்களின் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்காக உதவி செயற்பாடுகளுக்காக நிதியளித்தலே அடிப்படை நோக்கமாக இருந்தது. எனினும் நிதியத்தின் செலவினங்களை மேற்கொள்வது தொடர்பாக பரீட்சிக்கும் போது அந்நோக்கத்திற்கு இணங்காத வகையில் ஊழியர் சீருடை மற்றும் அச்சிடல் செலவினத்திற்காக ரூபா 6,534,371 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தொழிலாளர்களுக்கு உரித்தான சீருடை படிகளான ரூபா 4,000 இற்கு தைத்து பூர்த்தி செய்யப்பட்ட உடையாக வழங்கலாகவும் அதில் அரசிற்கு மேலதிக கிரயமொன்று ஏற்படவில்லையெனவும் சேமிப்பொன்று இடம்பெற்றுள்ளதாகவும் அறிய தருகின்றேன். அச்சிடல் செலவினங்களில் இருந்து பூங்காக்களுக்குள் நுழைவதற்கு நுழைவுச்சீட்டு அச்சிடுவதற்காக செலுத்திய விசேட மீண்டெழும் கொடுப்பனவாகும். | நிதியத்தை தாபிக்கும் நோக்கங்களுக்கு இணங்க செலவினத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 12 செயற்பாடுகளுக்குரிய மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 49,640,000 ஆக இருந்த போதும் உள்ளவாறான செலவினம் ரூபா 33,983,583 ஆக இருந்தமையால் சேமிப்பு ரூபா 15,656,417 ஆக இருந்தது. அச்சேமிப்புக்கள் நிதிஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | பல மாதங்களாக தாவரவியல் பூங்காக்கள் உட்பட அலுவலகம் மூடப்பட்டதால் நிர்மாணம் மற்றும் தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிப்பதில் தாமதம் காணப்பட்டமை, கொள்வனவு உட்பட செலவினங்களை இயலுமானவரை மட்டுப்படுத்துவதற்கும் எதிர்பார்த்த மட்டத்தில் பயிர் ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமையாலும் இந்நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. மேலும் 2020 ஆம் ஆண்டிற்குரியதாக கோரப்பட்ட கட்டுநிதி கிடைக்காமையால் ரூபா 4,732,280 தொகை கையிலுள்ள பட்டியலொன்றாக சேமிப்பு இடம்பெற்றுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் உரிய காலப்பகுதயில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது மொத்த மதிப்பீட்டில் ரூபா 10,300,000 தொகை அதாவது 13 சதவீதம் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகள் குறிப்பிடப்படாமல் மீண்டெழும் செலவினம், நிகழத்தக்க மற்றும் பொது மேந்தலை செலவினமாக நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பொது மேந்தலைகளுக்காக கிடைக்கும் நிதி ஏற்பாடுகள் தொடர்பாக பூங்காக்கள் நிதியத்தின் பொறுப்பு சபைக்கு அறிவிக்கப்பட்டதுடன் தாவரவில் பூங்காவின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் C, E, F இன் பிரகாரம் மற்றும் அவ்வாவணத்தின் 5(ஆ) இன் பிரகாரம் நிதியத்தின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கு தேவையான இச்செலவினத்திற்காக நம்பிக்கை பொறுப்பு சபை கூட்டத்தில் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | மீண்டெழும் செலவினத்திற்காக நிதிஏற்பாடுகளை மேற்கொள்ளும் போது மிகவும் கவனமாக மேற்கொள்ளப்படட வேண்டும். |